## புத்தள பிரதேச சபை

## மொனராகலை மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூன் 23 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு புத்தள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறு செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 144,340 தொகை எனினும் அவை ரூபா 110,000 தொகை என ரூபா 34,340 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய செலுத்துகை டவர் வருமானம் ரூபா 273,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 277,103,991 தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தொழில் தகைமை உள்ள பெறுமதி மதிப்பீட்டுத் தொழிலில் அங்கத்தவர் ஒருவரினால் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான கணக்கீடு செய்யப்படாத 26 காணித் துண்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தொழிற் தகைமையுடைய பெறுமதி மதிப்பீட்டு தொழிலில் அங்கத்தவர் ஒருவரினால் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988-2015 ஆண்டு வரை முன்கொண்டு வந்து காணப்படும் 6 வாடகை ஆதனங்கள் தொடர்பாக வாடகை ரூபா 1,732,025 தொகையினை மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது மோட்டர் கிரேட்டர் , நிலம் தகர்க்கும் இயந்திரம், பெக்கோ லோடர் மற்றும் டிபர் வண்டி என்பவற்றை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 3,498,234 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) புதிய கடைகள் நிர்மாணிக்கும் போது அகற்றப்பட்ட பழைய கடைகளின் வாடகையாளர்களிடம் அறவிடப்படவேண்டியிருந்த ரூபா 162,183 தொகை நிலுவை கடை வாடகை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பல வருட காலம் முதல் முன்கொண்டு வரப்படும் சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 165,950 தொகை பதவியணி கடன் மீதியொன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) பல வருட காலம் முதல் முன்கொண்டு வரப்படும் ரூபா 144,340 தொகையான நிலுவை உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையைத் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் செயற்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 401,765,888 தொகைக்கான 03 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 5,382,127 தொகைக்கான 02 பொறுப்பு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திரகரமான சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

---------------------------------------------------------------------------------------------

ஊவா மாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் 1816/43 ஆம் இலக்கம் மற்றும் 2013 ஜூன் 28 திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட 23 துணை விதி நடமாடும் (சுற்றுலா) வியாபாரத்தினை கட்டுப்படுத்துவதற்கான துணை விதியை நெருங்குவதற்கு இயலாதுள்ளது. அத்துடன் சபையினால் அங்கீகாரமற்ற வியாபார நிறுவனங்கள் மற்றும் நடமாடும் வியாபாரங்களை மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் அவ் விடயத்திற்காக அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்குதல், ஒழுங்குபடுத்துதல், தடைசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-----------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,080,441 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வருமானத்தை மிகைத்துள்ள மீண்டுவரும் செலவு ரூபா 1,094,873 தொகையாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 5,985,568 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

-----------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 10,062,116 தொகைக்கான நிலுவை வருமானத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 வீத வரி

---------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீத வரி அறவீடு செய்வதற்கான ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2006 ஆண்டின் பின்னர் வீதவரிக்காக பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆண்டின் போது வீத வரி சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 2,020,488 தொகையாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்த வரி ரூபா 949,201 ஆகும். அவை மொத்தமாக சிட்டையிட்ட பெறுமதியில் நூற்றிற்கு 46 ஆகிய குறைந்த சதவீதமானதாகும்.

(இ) 2015 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி வருமானம் ரூபா 5,244,549 தொகையாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் என ரூபா 2,243,950 தொகையே சேகரிக்கப்பட்டிருந்தது. அவை நூற்றிற்கு 42 ஆகிய குறைந்த சதவீதமேயாகும். அதன் பிரகாரம் வீத வரி அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 50 ஐ விட குறைந்த நிலையில் காணப்பட்டது.

2.2.3 வாடகை

----------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகையை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான ஆட்டு இறைச்சிக் கடை 2012 ஆண்டின் போது ரூபா 22,000 தொகை ஒன்றிற்கும், மாட்டிறைச்சிக் கடை 2013 ஆண்டின் போது ரூபா 1,526,265 தொகை ஒன்றிற்கும், இறுதியாக கேள்வி நடைமுறை மூலம் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆதனங்களை வாடகைக்கு கொடுப்பதற்கு கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும், வாடகையாளர் முன்வராமையால் 2015 ஆண்டு வரை வாடகைக்கு கொடுக்க முடியாதிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கவனம் செலுத்தி ஆதனங்கள் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 6 வாடகை ஆதனங்களில் இருந்து 1989-2015 காலப் பகுதி தொடர்பாக அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகைத் தொகை ரூபா 1,732,025 ஆக இருந்தது.

(ஈ) சபைக்குச் சொந்தமான வாடகைக்கு கொடுத்திருந்த 121 கடைகளில் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 265,425 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.4 செலுத்துகை டவர் கட்டணம்

------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு தொலைபேசி கம்பனிகளினால் 2008 முதல் 2013 ஆண்டு வரை நிர்மாணிக்கப்பட்டிருந்த 15 செலுத்துகை டவர்களில் இருந்து 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152 ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த வாடகையொன்றினை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

--------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 723,701 மற்றும் முத்திரைக் கட்டணத் தொகை ரூபா 309,570 ஆகும்.

2.3 மிகை விதிப்பு

-----------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்லவேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 733,241 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

(அ) மின் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் வீதி விளக்குகள் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளுராட்சி நிறுவனங்கள், வீதி விளக்குகளை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக சேவை வழங்குனர் ஒருவரால் கடமையாற்ற வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 173,666 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை குடியசரின் நிதிப் பிரமாணங்கள் 571 ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 651,853 பெறுமதியான வைப்புக்களை ஆதனவளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 ஒப்பந்த நிருவாகம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் PED/PMD/clari/11/02 மற்றும் 2011 செப்டம்பர் 27 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 452 இல் பிரிவு 3.1 இன் பிரகாரம் திணைக்கள தலைவர் மற்றும் அப் பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெயர் குறிப்பிடும் பிரதிநிதிகள் இருவர் உட்பட மூன்று நபர்களைக் கொண்ட குழு ஒன்றினால் மேற் கூறிய சுற்று நிருபத்தின் பிரிவு 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசோதனை செய்து சனசமூக அடிப்படை அமைப்புகளுக்கு ஒப்பந்தங்களை சாட்டுதல் செய்ய வேண்டும். எனினும் 08 நிர்மாண வேலைகள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை. அத்துடன் மேற் கூறிய சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணங்கள் 703(1)(ஆ) இற்கு முரண்பட்ட விதமாக உப ஒப்பந்தங்கள் வழங்குவதும் நடைபெற்றுள்ளது.

(ஆ) உடன்படிக்கைகளின் பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டிய நாளாந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாத 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 37,630 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 மனித வள முகாமைத்துவம்

--------------------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 19(1) ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளுராட்சி ஆணையாளரின் எழுத்துமூலமான பூர்வாங்க அங்கீகாரம் ஒன்று இன்றி மீளாய்வாண்டின் போது பிரதியீட்டு சுகாதார தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு சேர்க்கப்பட்ட நாள் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை ரூபா 334,354 தொகையொன்று சம்பளப் படி ஊழியர் சேமலாபம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாண 71 மற்றும் 2014 நவம்பர் 12 திகதிய இலக்கம் 25/2014 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் சபையில் அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் கடமையாற்றிய இயந்திர இயக்குனர், காவலாளி வெளிக்களத் தொழிலாளர்கள், சுகாதார தொழிலாளர் மற்றும் இயந்திர இயக்குனர்

உதவியாளர் ஆகிய பதவிகளுக்காக 35 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு வெளியே நிரந்தர சேவைக்கு நியமனம் வழங்கியிருந்தனர்.

(இ) 7 பதவிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினரை விட ஊழியர்கள் 36 பேரை சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

----------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பீட்டு வருமானம், செலவுகள் மற்றும் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம், செலவுகள் இடையே காணப்படும் முக்கியமான முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகளின் கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

------------------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---------------------------------------------------------------------------

2009 ஜூன் 09 திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைப்பதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்